

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் உடல்நலக் குறைவால் காலமான நாகாலாந்து மாநில ஆளுநர் இல. கணேசன் அவர்களின் உடல் வைக்கப்பட்டுள்ள தியாகராய நகரிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு திடலிற்கு நேற்று(16.8.2025) நேரில் சென்று தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரன், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே ஆகியோர் உள்ளனர்.

# பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளித்தல் ஆகியவற்றில் துரித நடவடிக்கை தேவைப்படுவதாக தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதலாக, அவசரக் கடன் வரி உத்தரவாதத் திட்டத்தின் கீழ் (ECLGS) 30% பிணையமில்லாத கடன்களை 5% வட்டி மானியம் மற்றும் அசலைத் திருப்பிச் செலுத்துதலில் இரண்டு ஆண்டு தற்காலிக தடையுடன் நீட்டித்தல், RoDTEP நன்மைகளை 5% ஆக உயர்த்துதல், நூல் உட்பட அனைத்து ஜவுளி ஏற்றுமதிகளுக்கும் முன் மற்றும் பின் கடனை நீட்டித்தல் ஆகியவை நமது ஏற்றுமதி போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கான பிற முக்கியமான காரணிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

**உற்பத்தித் துறைக்கு கடும் அச்சுறுத்தல்!**

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்க வரி தாக்கங்கள் மற்றும் போட்டி அழுத்தங்கள் காரணமாக மற்ற துறைகளும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கின்றன என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், அதற்கு உடனடி நிவாரணம் வழங்கி, பணப்புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்கவரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதையும், அதிக சுங்க வரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAக்கள்) மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்துவதையும் ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் செயல்படுத்தப்பட்டதைப் போன்று, அசலைத் திருப்பிச் செலுத்துவதில் சலுகை உள்ளிட்ட ஒரு சிறப்பு நிதி நிவாரணத் தொகுப்பு நமது ஏற்றுமதியாளர்களை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்றும், பிரேசில் அரசு அந்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு வரி ஒத்திவைப்பு மற்றும் வரிச் சலுகைகளை அறிவித்துள்ளதைப் போன்று, இந்தியாவிலும் இதுபோன்ற ஒரு முயற்சியை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் வலுவான உற்பத்தித் துறை, இதுவரை கண்டிராத ஒரு நெருக்கடியை தற்போது எதிர்கொள்வதாகவும், பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் தொழில்துறையைச்சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதோடு, இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும் ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு முழு ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் தனது கடிதத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## மாற்றுக் கொள்கைகள் கொண்ட தலைவர்களிடத்திலும் மரியாதை பாராட்டி

# மாண்புடன் அரசியல் நாகரிகத்தை பேணிக்காத்த அரிய தலைவர்களில் ஒருவர் இல.கணேசன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, ஆக. 17–

நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :–

**மூத்த அரசியல் தலைவரும் நாகாலாந்து மாநில ஆளுநருமான இல.கணேசன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் துயருற்றேன்.**

**இல.கணேசன் அவர்கள் பா.ஜ.க. மாநிலத் தலைவர், பா.ஜ.க. தேசிய துணைத் தலைவர், மாநிலங்களவை உறுப்பினர், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து மாநிலங்களின் ஆளுநர் எனப் பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்த, நீண்ட பொதுவாழ்வுக்குச் சொந்தக்காரர்.**

**அரசியல் வாழ்க்கைக்காகத் திருமணம் கூட செய்துகொள்ளாமல் பொதுவாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்.**

**நெருக்கடி நிலைப் பிரகடனத்தை கண்டித்துப் போராட்டம் நடத்தி, பாடல்கள் எழுதியவர்.**

**மாற்றுக் கொள்கைகள் கொண்ட இயக்கங்களில் உள்ள தலைவர்களிடத்திலும்**



**மரியாதை பாராட்டி, மாண்புடன் நடந்துகொண்டு, அரசியல் நாகரிகத்தைப் பேணிக்காத்த அரிய தலைவர்களில் ஒருவர். இல. கணேசன் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் மீது பெரும் மதிப்பு கொண்டிருந்தார். தலைவர் கலைஞர் அவர்களும் முதலமைச்சராக இருந்தபோது, இல. கணேசன் அவர்களின் பிறந்தநாளில் அவரது இல்லத்துக்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து, தமது அன்பை வெளிப்படுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

**எளிமை, அதிர்ந்து பேசாத பண்பு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தன்மை ஆகியவற்றால் அனைத்துத் தரப்பிலும் நண்பர்களைக் கொண்டவராகத் திரு. இல. கணேசன் அவர்கள் விளங்கினார்.**

**என் மீதும் தனிப்பட்ட முறையிலும் அன்பு காட்டி வந்தார். அவரது இல்லத்தில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அவரும் அவரது குடும்பத்தினரும் என்னை நேரில் வந்து அழைக்கும் அளவுக்கு நல்ல நட்பினை நாங்கள் இருவரும் பேணி வந்தோம்.**

**உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் முழு உடல்நலம் பெற்று, மீண்டு வருவார் என எதிர்பார்த்திருந்த நிலையில், அவரது மறைவுச் செய்தி வேதனையளிக்கிறது.**

**அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், அரசியல் கட்சித் தலைவர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ‘திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி’ என

# தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை இழந்து விட்டோம்!

## திராவிட இயக்க எழுத்தாளர் திருவாரூர் அர.திருவிடம் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 17–

**திராவிட இயக்க எழுத்தாளரும் தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளருமான திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**

**“திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணியெனத் தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம்!” என உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.**

‘திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச் செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

தந்தை பெரியாரின் பெருந்தொண்டராக விளங்கிய திருவாரூர் தண்டவாளம் அரங்கராஜ் அவர்களின் புதல்வரும், திராவிட இயக்க எழுத்தாளரும், தி.மு.கழகத்தின் கலை, இலக்கிய, பகுத்தறிப் பேரவைச் செயலாளருமான திருவாரூர். அர. திருவிடம் அவர்கள் மறைந்தார் என்று அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

அர. திருவிடம் அவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை அனைவரிடத்திலும் கொண்டு சேர்க்க 1972 ஜூன் முதல் வார இதழாக வெளிவந்த ‘திருவிடம்’ எனும் இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். திராவிட இயக்க முன்னோடி



களின் படங்களை முகப்பில் ஏந்தி, பல முன்னணி திராவிட அறிஞர்களின் படைப்புகளையும், பகுத்தறிவுப் புதையலான கட்டுரைகளையும் கொண்டு இது வெளியாகி வந்தது.

கலைஞரின் காலடிச் சுவடுகள். கலைஞர் 100: சகாப்தமும் சாமான்யனும், காந்தி – கோட்சே, தி.மு.க. பெற்ற வெற்றிகளும் வீரத் தழும்புகளும், திராவிடப் புதையல், தூக்கு வேண்டாம் துப்பாக்கியால் சுடு என எண்ணற்ற நூல்களைத் தொடர்ந்து எழுதி வந்து அறிவுப் பங்களிப்பினைச் செய்து வந்தவர் அர. திருவிடம் அவர்கள்.

அர. திருவிடம் அவர்கள் எழுதி சீதை பதிப்பகத்தின் வெளியீடாக வந்த ‘திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை’ எனும் முக்கிய வரலாற்று நூலினை 2019ஆம் ஆண்டு கழக இளைஞரணிச் செயலாளர் இன்றைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டிருந்தார் என்பதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

அர. திருவிடம் அவர்களின் செறிவான பங்களிப்புகளுக்கு அங்கீகாரமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் சிறப்பு நேர்வாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் ‘இலக்கிய மாமணி’ விருது இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

குடும்பம் குடும்பமாக, வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறையாக இயக்கம் வளர்க்கும் திராவிட இயக்கத்தின் மரபில், தனது தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, திராவிடம் பரப்புவதே தனது வாழ்க்கைப் பணி எனத் தனிமனித இயக்கமாகவே செயல்பட்டு வந்த வரலாற்று, கருத்துப் பெட்டகத்தை நாம் இழந்துவிட்டோம். ஆற்றல்மிகு கொள்கைப் பிடிப்பாளரான அர. திருவிடம் அவர்களின் மறைவு தமிழ்ச் சமூகத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் மிகப் பெரும் இழப்பு.

அவர் மறைந்தாலும் அவரது படைப்புகளும் பணியும் திராவிட இயக்கத்தின் தொண்டினையும் வீரமிகு வரலாற்றையும் அடுத்த தலைமுறை இளைஞர்களுக்குத் தொடர்ந்து கொண்டு சேர்க்கும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், திராவிட இயக்க அறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தி.மு.க. அயலக அணியின் துணைப் பொறுப்பாளர்

# ச.கமலக்கண்ணன் எழுதிய ‘ஜப்பானியப் பழங்குறு நூறு’ இலக்கிய நூல்!

## பேராசிரியர் ய.மணிகண்டன் வெளியிட – முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் பெறுகிறார் ! கோவி.லெனின் பங்கேற்பு!

சென்னை, ஆக. 17–

கழக அயலக அணியின் ஜப்பான் கிளையின் துணைப் பொறுப்பாளர் ச. கமலக்கண்ணன் ஜப்பானிய இலக்கியம் ஒன்றுக்குத் தமிழில் வெண்பாவுடன் கூடிய உரையை எழுதியுள்ளார்.

‘ஜப்பானிய பழங்குறுநூறு’ எனும் இந் நூலின் அறிமுகக்கூட்டம் சென்னை – ஆழ்வார்பேட்டை – சி.ஐ.டி. காலனி பகுதியில் அமைந்துள்ள கவிக்கோ அரங்கத்தில் இன்று (17.8.2025 – ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

சென்னைப் பல்கலை தமிழ்மொழித் துறையின் தலைவர் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் தலைமையில் முனைவர் பாரதி கிருஷ்ண குமார் நூலை அறிமுகப் படுத்தி உரையாற்றுகிறார்.

இயக்கத் தோழர்கள் கோவி. லெனின், வழக்கறிஞர் காந்தி முதலானோர் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் நூலாசிரியர் ச.கமலக்கண்ணன் ஜப்பானிய இலக்கியத்தை அறிமுகம் செய்து ஏற்புரை ஆற்றுகிறார்.

இலக்கிய உலகுக்குப் புதுவரவாக உள்ள இவ்வுரை நூல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸால் பதிப்பிக்கப்பட்டது. இலக்கிய ஆர்வலர்கள் திரளாகப் பங்கேற்கும் இந்நிகழ்வை ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் சென்னைக் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

## இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு,

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சமத்துவ விருந்து!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பித்தார்!

சென்னை, ஆக.17-

**இந்திய திருநாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்று முன்தினம் (15.08.2025) 79-வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னையிலுள்ள முக்கிய திருக்கோயில்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சிகளில் துணை முதலமைச்சர், சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இன்று நடைபெற்ற சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களும் கலந்து கொண்டு பொதுமக்களோடு அமர்ந்து உணவு அருந்தினர். அதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் என்.சிற்றரசு, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகராட்சி மன்ற உறுப்பினர் காமராஜ், இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் / துணை ஆணையர் திருமதி சி.நித்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், இராயப்பேட்டை, சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களும், அடையாறு, அனந்தபத்மநாப சுவாமி திருக்கோ யிலில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களும், திருவான்மியூர், மருந்தீசுவரர் திருக்கோயிலில் வேளா ண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களும், பெசன்ட் நகர், மகாலட்சுமி திருக்கோயிலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களும், வடபழநி, வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களும் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவட்டீஸ்வரன் பேட்டை, திருவட்டீ ஸ்வரர் திருக்கோயிலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களும், பாரிமுனை காளிகாம்பாள் திருக்கோயிலில் கூட்டுற வுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும், திருவான்மியூர், பாம்பன் சுவாமி திருக்கோயிலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களும், தேனாம்பேட்டை, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களும், கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அவர்களும், திருவொற்றியூர், தியாகராஜசுவாமி திருக்கோயிலில் மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களும்,

மாங்காடு காமாட்சி அம்மன் திருக்கோயி லில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் அவர்களும், சென்னை கச்சாலீஸ்வரர் திருக்கோயிலில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அவர்களும், பாடி திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயிலில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களும், கே.கே.நகர் சக்தி விநாயகர் திருக்கோயிலில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களும், சென்னை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களும், வில்லிவாக்கம் சௌமிய தாமோதர பெருமாள் திருக்கோயி லில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் அவர்களும், அமைந்தகரை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் தேவைகள் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்களும்,

திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயி லில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் அவர்களும், மயிலாப்பூர் முண்டக கன்னியம்மன் திருக்கோயிலில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும், மயிலாப்பூர் மாதவப் பெருமாள் திருக்கோயிலில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வீ. மெய்யநாதன் அவர்களும், மேற்கு தாம்பரம் செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயி லில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களும், சிந்தாதி ரிப்பேட்டை ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் மற்றும் அரசு தலைமை கொறடா க.இராமச்சந்திரன் அவர்களும், பூங்கா நகர் முத்துக் குமார சுவாமி திருக்கோயிலில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களும்,

கீழ்பாக்கம் பாதாள பொன்னியம்மன் திருக்கோயிலில் ஆதிராவிட நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்களும், சென்னை சென்னமல்லீஸ்வரர் திருக்கோயிலில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களும், சென்னை அருணாச்சலேஸ்வரர்திருக்கோயிலில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்களும், மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த. வேலு அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.